மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 107, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

107.—

பச்சையாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 1317—திரு. பே. தர்மலிங்கம்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதியிலுள்ள கீழத்திடியூர் அருகே பச்சையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பே. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில் கிளியூர் கிராமத்திற்கும், மேலத்தூர் கிராமத்திற்கும் இடையில் பச்சையாறு ஓடுகிறது. மழைக் காலங்களில், வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் இது ஒரு தனி தீவாகக் காட்சியளிக்கிறது. அந்த நேரத்தில் பள்ளி மாணவ, மாணவியர்கள் பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. குறிப்பாக தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் மருத்துவ உதவிக்குச் செல்ல முடியாமல் தவிக்கிறார்கள். எனவே, தாய் உள்ளம் கொண்ட நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு இப்பகுதி மக்களின் குறைகளைப் போக்க அங்கே ஒரு பாலம் அமைக்க ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தருவி சிங்கைகுளம் ஓடியாறு என்று சொல்லுகிற இதர பணிச் சாலைகளைச் சார்ந்த அந்தச் சாலையின் குறுக்கே இந்தப் பாலம் கட்டப்பட வேண்டியதாகும். இதற்கான மதிப்பு ஏறத்தாழ் ரூ. 35 இலட்சம் ஆகின்றது. இப்போது இருக்கின்ற நிதி நிலையை அனுசரித்து இந்த ஆண்டு செயல்படுத்த முடியாவிட்டாலும், 'செல்ஃபா' புராஜெக்டில் இந்த திட்டம் சேர்க்கப்படுகிறது. ஆகவே இது குறித்து அந்தத் திட்டத்திலே அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 108, திரு. கே. சிங்காரம். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

108

பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம்.

*வினா எண் 3565—திரு. கே. சிங்காரம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் கடத்தூர் அருகே 18 ஏரிகளுக்குத் தண்ணீர் வரத்து அளிக்கும் பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு சுமார் 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்தத் திட்டம் ஆய்வு செய்யப்படுகிற சமயத்திலே சுமார் ரூ, 20 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. இன்றைக்கு ரூ. 43 இலட்சம் அளவிலே அரசின் பகுதி-2 திட்டத்தில் சாங்ஷன் செய்யப்படுகிற பட்டியலில் இருப்பதாக நான் அறிகிறேன்.